செய்தி வெளியீடு எண்:487 நாள்:19.10.2016

**<u>செய்தி வெளியீடு</u>**

**<u>இந்து சமய அறநிலையத்துறை</u>**

**திருக்கோயில்களின் மேம்பாட்டுப்பணிகளில் அலுவலர்கள் சிறப்பாக பணியாற்ற வேண்டும்–மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் திரு.சேவூர் எஸ்.இராமசந்திரன் அலுவலர்கள் ஆய்வுக்கூட்டத்தில் வேண்டுகோள்**

====================================

சென்னை, நுங்கம்பாக்கத்தில் உள்ள இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் அலுவலகக் கூட்ட அரங்கில் இன்று (19.10.2016) இந்து சமய அறநிலையத் துறை செயல்பாடுகள் குறித்த அலுவலர்கள் கலந்தாய்வுக் கூட்டம், மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் திரு.சேவூர் எஸ்.இராமசந்திரன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் அமைச்சர் பேசும்போது, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தமது திருக்கரங்களால் திருக்கோயில்களில் அன்னதானம் திட்டத்தினை துவக்கிவைத்ததன் பயனாக தற்பொழுது, 724 திருக்கோயில்களில் அன்னதானத்திட்டம் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருவதுடன், நடப்பாண்டு மேலும், 30 திருக்கோவில்களில் அன்னதான திட்டம் தொடங்கிட உத்தரவிட்டுள்ளார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அறிவித்த சிறப்புத் திட்டங்களான இந்து சமய அறநிலையத் துறை கட்டுப்பாட்டின் கீழ் உள்ள திருக்கோயில்களில் பணிபுரிந்து ஓய்வு பெற்ற திருக்கோயில் பணியாளர்களுக்கு துறை நிலையிலான ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் தற்போது மாதம் 1,000/– ரூபாய் ஓய்வூதியம் வழங்கப்பட்டு வருகிறது. இந்த ஓய்வூதியதாரர்களுக்கு தற்போது வழங்கப்பட்டு வரும் ஓய்வூதியத்தை உயர்த்தி வழங்க ஓய்வூதியதாரர்கள் கோரிக்கை விடுத்ததனால், திருக்கோயில் பணியிலிருந்து ஓய்வு பெற்றுள்ள அவர்களது குடும்ப சூழ்நிலையை கருத்தில் கொண்டு தற்போது வழங்கப்பட்டு வரும் துறை நிலையிலான மாத ஓய்வூதியம் 1,000/–ரூபாயிலிருந்து 2,000/– ரூபாயாக உயர்த்தி வழங்க அறிவிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மூலம் மூலம் 3,700 ஓய்வூதியதாரர்கள் பயன் பெற தேவையான நடவடிக்கைகளை அலுவலர்கள் விரைந்து மேற்கொள்ள வேண்டும்.

இந்து சமய அறநிலையத் துறை கட்டுப்பாட்டின் கீழ் இல்லாத ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வாழும் பகுதிகளிலுள்ள திருக்கோயில்களின் திருப்பணி மற்றும் பழுது பார்க்கும் பணிக்கு திருக்கோயில் ஒன்றுக்கு வழங்கப்பட்டு வரும் நிதியுதவியினை 50,000/– ரூபாயிலிருந்து ஒரு லட்சம் ரூபாயாக உயர்த்தி வழங்கிட மான்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். இதற்கென ஏற்படும் செலவினை நிதிவசதி மிக்க பிற திருக்கோயில்களின் உபரி நிதியிலிருந்து மேற்கொள்வதற்கு அலுவலர்கள் உரிய நடவடிக்கைகள் எடுக்க வேண்டும்.

திருக்கோயில்களில் நிதி பற்றாக்குறை காரணமாக தினசரி ஒரு வேளை பூஜைகூட நடைபெறாத திருக்கோயில்களில் ஒருகால பூஜையாவது நடைபெற வேண்டுமென்ற நோக்கில் ‘ஒருகால பூஜை வைப்பு நிதி திட்டம்’ ஏற்படுத்தப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் தற்போது 12,504

திருக்கோயில்கள் பயன்பெற்று வருகின்றன. இந்தாண்டு மேலும் **241** திருக்கோயில்களுக்கு இத்திட்டத்தினை விரிவுபடுத்திட அலுவலர்கள் முனைப்புடன் பணியாற்ற வேண்டும்.

தமிழகத் திருக்கோயில்கள் நிகழ்வுகளை ஆவணப்படுத்தி படங்கள், காணொலிகள், பின்னணி இசை கொண்ட பல்லூடக (Multimedia) வசதியுடனான ஒரு நவீன இணையதளம் 25 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் வடிவமைக்கும் பணிகளை விரைந்து முடித்து பக்தர்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவரவேண்டும்.

இதுபோல் தமிழகத்தின் அனைத்து திருக்கோயில்களிலும் பக்தர்களுக்கான அடிப்படை கட்டமைப்பு வசதிகள் அனைத்தும் சிறப்பாக செயல்படுவதை உறுதி செய்யவேண்டும் என்றும், திருக்கோயில்களுக்கு வருகை தரும் பக்தர்களுக்கு எந்தவிதத்திலும் மனம் புண்படாதவண்ணம் அர்ப்பணிப்பு மனப்பான்மையோடு அவர்களை அணுகி தேவைகளை நிறைவேற்றித்தர வேண்டும் என்றும் அமைச்சர் கேட்டுக்கொண்டார்.

பக்தர்களின் வசதிக்காக அனைத்து திருக்கோயில்களிலும் நவீன கழிவறை, குளியல்அறை மற்றும் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் போன்ற அடிப்படை வசதிகளை தனி மேற்பார்வையில் செய்திட நடவடிக்கை எடுக்குமாறும், திருக்கோயில்களில் முக்கிய திருவிழாக்கள் நடைபெறும் காலங்களில் பெருமளவில் பக்தர்கள் வருகை தருவதால் விழாவில் எவ்வித அசம்பாவிதமும் நடைபெறாமல், உரிய பாதுகாப்பு முன்னேற்பாடுகளை செய்திடவும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அலுவலர்களுக்கு அறிவுரை வழங்கினார்.

கூட்டத்தில் சுற்றுலா, பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையங்கள் துறை முதன்மை செயலாளர்(பொ) திரு.டி.கே.இராமச்சந்திரன் இ.ஆ.ப., இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் முனைவர் மா.வீரசண்முக மணி, கூடுதல் ஆணையர் (விசாரணை) திருமதி ந.திருமகள், கூடுதல் ஆணையர் (திருப்பணி) மா.கவிதா கூடுதல் ஆணையர் (பொது) திரு.இரா.ஞானசேகரன், இணை ஆணையர்கள், துணை ஆணையர்கள், உதவி ஆணையர்கள், செயல் அலுவலர்கள் மற்றும் தலைமையிட அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

ஆணையர்
இந்து சமய அறநிலையத்துறை

**வெளியீடு: – இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.**